1979 மார்ச் 14]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ஜப்பானிலே வாங்கப்படுகிற எஞ்சினின் விலை என்ன? அதே போன்று இந்தியாவிலே அவர்கள் சொல்கிற விலை என்ன? இந்தியாவிலே தயாரிக்கப்படுகிற எஞ்சினை வாங்கிப் பரீட்சார்த்த மாகப் பார்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட உத்திரவிடப்பட்டிருக்கிற 200 எஞ்சின்களின் விலை அன்னியச் செலாவணி ரூபாய் 11 இலட்சத்து 5,802. அதாவது ஒரு இலட்சத்து 29,600 அமெரிக்கன் டாலர்கள். இதைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு எஞ்சினுக்கு, துறைமுகத்திலே இறக்குமதியாகும்பொழுது நமக்கு ஏற்படும் விலை ஏறக்குறைய ஐயாயிரத்து ஐநூறு (5,500) ரூபாய்க்கு அருகில் வருகிறது. இங்கே தயாரிக்கப்படுகின்ற எஞ்சின்களின் விலையெல்லாம் இதைவிடக் கூடுதலாகத்தான் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், நான் ஏற்கனவே சொன்னதைப்போல நம்முடைய மீனவர்களுக்குப் பொருத்தமானது மண்ணெண்ணெயால் ஓடுவதுதான் பொருத்தமாக இருக்கும். பெட்ரோலால் ஓடும் என்சின்கள் பொருத்தமாக வராது. இப்பொழுதே நான்கு ரூபாய் விற்கிறது. அதைக் கணக்கில் வைத்துதான் இந்த எஞ்சின் களை வாங்குவது என்று இப்பொழுது அரசு முடிவு செய்தது.

விவசாயப் பொருட்களுக்கான கொள்முதல் விலை அறிவிப்பு,

* வினா எண் 385—திரு. துரை முருகன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதை விதைக்கும் பருவத்திற்கு முன்பே, விவசாய பொருட்களுக்கான கொள்முதல் விலை அறிவிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் சாதக பாதகங்களை மத்திய அரசுக்கு மாநில அரசு அறிவித்ததா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) ஆம்.

(ஆ) விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு விதை விதைக்கும் பருவத்திற்கு முன்பே விவசாயி விளை பொருட்களுக்கு கொள்முதல் விலை அறிவிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தி வந்துள்ளது. அடுத்த ஆண்டு முதல் இவ்வாறு செய்யப்படுமென்று மந்திய அரசு இப்பொழுது அறிவித்துள்ளது.

[1979 மார்ச் 14

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, விதை விதைக்கும் பருவத்திற்கு முன்பே விலை அறிவிக்கப் படும் என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும்? நெல் போன்ற தானியங்களுக்கு இப்பொழுது இருக்கும் விலையை விட அதிகமாக விலை நிர்ணயம் செய்வதற்கு மத்திய அரசு ஏதேனும் அறிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசாலே இப்பொழுது எந்தெந்த உணவுப்பொருட்களுக்குக் கொள்முதல் விலை நிர்ண யிக்கப்பட்டிருக்கிறதோ அந்த உணவுப்பொருட்கள் எல்லா வற்றிற்கும் அடுத்த ஆண்டு முதல், விதை விதைக்கும் காலத் திலேயே அதற்கான விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும். விலை அதிகமாகக் கூட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டார்கள். பலமுறை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன், எந்த உணவுப் பொருளுக்கும் விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மத்திய அரசினிடத்திலே இருக் கிறது, மாநில அரசுக்கு இல்லை. இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசிடம், நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டும், இங்கே நெல் உற்பத்திக்காகும் செலவின் அடிப்படையில் அதிக விலை கொடுக்க வேண்டும், உற்பத்தி 117 ரூபாய் வருகிறது. ஆகவே, 130 ரூபாய் கொடுக்க வேண்டும், அப்படியில்லா விட்டால் கோதுமைக்குக் கொடுப்பதைப் போலாவது நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவதையும், தென் மாநில முதல்வர்கள் மாநாட்டை நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் கூட்டிய நேரத்திலும் இதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சுருக்கமாகச் சொல்லியிருந்தால் துணைக் கேள்விகள் இத்தனை எழாது. அமைச்சரவர்கள் விரிவாகச் சொல்வதால்தான் துணைக் கேள்விகள் நிறைய எழுகின்றன. எனவே, சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, விதை வினியோகம் செய்யும்பொழுது அதன் முளைப்புத் திறனைப் பரிசோதித்துப் பார்க்கிறார்களா? சில கிட்டங்கிகளில் —டெப்போக்களில்—முதல் ஆண்டு விதைகள் விற்காமல் இருந்தால்

மறு ஆண்டும் அதே விதைகள் விற்கப்படுவதாகக் குறை கூறப்படுகிறது. அது உண்மையாக இருந்தால் அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி விவசாயப்பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும் காலத்தைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது விதையின் தரத்தைப் பொறுத்தது. இரண்டுக்கும் பொருத்தமில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே, நெல்லுக்கு விலையை நிர்ணயிப்பதைப்போல இதர உணவுப் பண்டங்களுக்கும் விலை நிர்ணயம் ஏற்பட அரசு முன் ஏற்பாடு உண்டா? அதேபோல பருத்தி, கரும்பு, நிலக்கடலை போன்ற உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயிக்கும் ஏற்பாடு உண்டா? அப்படி ஏற்பாடு செய்யக்கூடிய நேரத்தில் உற்பத்தியாகும் பொருட்களை விவசாயிகளிடமிருந்து அந்த விலைக்குச் சேகரம் செய்ய அரசு என்ன ஏற்பாட்டை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரும்புக்கு ஏற்கனவே விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விலை போதாது என்றுதான் கரும்பு உற்பத்தியாளர்கள் இப்பொழுது போராட்டம் நடத்திக்கொண்டு வருகிறார்கள். தங்கள் பிரச்னைகளையெல்லாம் அரசாங்கத்தின் முன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது மத்திய அரசு வரைக்கும் போயிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும்.

நிலக்கடலைக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்றாலும் நிலக்கடலை விலை நிர்ணயம் செய்யப்பட்டதற்கும் அதிகமான விலையிலே வெளிச்சந்தையிலே இப்பொழுது விற்றுக் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 9.30]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நெல் விலை நிர்ணயம் பற்றி இங்கே கேள்வி கேட்டார்கள். இப்பொழுது ரஷியப் பிரதமருக்கும் இந்தியப் பிரதமருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே 6 இலட்சம் டன் நெல்லை, பெட்ரோலுக்குப் பதிலாக வழங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இப்பொழுது வாய்ப்பிருக்கிற காரணத்தாலே மத்திய சர்க்காரை வலியுறுத்தி, மீண்டும் விலையை ஏற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 14

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, தொடர்ந்து இந்த அரசு, நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டுதானிருக்கிறது. இவற்றை மனதிலே வைத்து, பாரதப் பிரதமருக்கும் ரஷியப் பிரதமருக்கும் இடையிலே ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தத்தின்படி, நெல், அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிற சூழ்நிலையில் அதற்கான விலையைக் கூட்டிக் கொடுக்கிற பொறுப்பு மத்திய அரசைப் பொறுத்தது என்றாலும் இந்த அரசு இந்த சூழ்நிலையைப்பயன்படுத்தி மத்திய அரசை வலியுறுத்தும்.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, கோதுமைக்குக் கொடுப்பது போல், நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் இந்த அரசு தொடர்ந்து வாதாடி வந்துகொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முடிவு காணமுடியுமா? இல்லையென்றால், மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி, கூடுதல் விலை பெற ஒரு தீர்மானம் நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டே வருகிறது, மீண்டும் அரசு வற்புறுத்துமா என்ற கேள்வியைத்தான் இறுதியிலே கேட்டார்கள். அதைத்தான் முதலிலே சொன்னேன். தொடர்ந்து மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. குறைந்தபட்சம் கோதுமைக்குக் கொடுக்கிற விலையை நெல்லுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த அவையிலே தீர்மானம் போடுவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பிரச்னையை இங்கே எழுப்பினார்கள். மாண்புமிகு முதல்வரோடு கலந்து அப்படிப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், நிச்சயமாக இந்த அரசு தீர்மானம் போடுவதற்குத் தயங்காது.

TRUTH ALONE TRIUMPHS

பொது நூலகங்கள்.

* வினா எண் 386—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அனைத்து மாவட்டங்களிலுமுள்ள நூலகங்களை அரசே ஏற்றுக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நூலக சீரமைப்புக் குழு அனைத்து நூலகங்களையும் அரசே தனது நேரடிப் பார்வையில் நடத்த வேண்டுமென்றும், நூலக ஆணைக் குழுக்கள் நடத்தத்